சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 04.10.2024 SC. 18/2018

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செந்தில் குமார் | தொழில் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | வயது | : |
| விலாசம் | : | | |

**அ.சா.11**

---

முதல் விசாரணை

நான் தற்சமயம் நிலக்கோட்டை உட்கோட்டத்தில் காவல்துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2016ம் அண்டு உத்தமபாளையம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றியபோது 08.08.2016ம் தேதி அப்போது காவல்நிலையத்தில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் என்பவரால் உத்தமபாளையம் காவல்நிலைய குற்ற எண்.519/2016 ஆக பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை அப்போதைய காவல் ஆய்வாளராகிய ராமலட்சுமி என்பவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு தன்னுடைய முதல் கட்ட புலன்விசாரணையை முடித்து விட்டு பணிமாறுதலில் சென்றுவிட்டதால் நான் கடந்த 12.10.2016ம் தேதி உத்தமபாளையம் காவல்நிலைய ஆய்வாளராக பொறுப்பேற்றவுடன் வழக்கு கோப்புகளை மேல்விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன். சாட்சிகளாள மருத்துவர்.முகமது அசாருதீன் மற்றும் மகேஷ்வரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி காயம்பட்ட நபருக்கான காயம் கொடுங்காயம் என சான்றளித்துள்ளார். மேற்படி வழக்கின் சட்டப்பிரிவினை 307 இ.த.ச.விலிருந்து 326 சட்ட மாறுதல் செய்து அதற்கான அறிக்கையினை உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சட்ட மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8. அதன்பின் எதிரி மீது 17.10.2016 அன்று 326, 307 இ.த.ச.வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்தேனா என்றால் என்னுடைய முந்தைய நிலைய ஆய்வாளர் சாட்சிகளை விசாரித்ததால் மீண்டும் நான் விசாரிக்கவில்லை. முந்தைய ஆய்வாளர் சாட்சிகளை சரிவர விசாரிக்கவில்லை என்றும், அதன்பின்னர் புலன் விசாரணை செய்த நானும் சரிவர சாட்சிகளை விசாரணை செய்யாமலும் ஒருதலைப்பட்டசமாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் அ.சா.7, அ.சா.9 மருத்துவர்களை நான் விசாரித்து அவரிடம் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்துக்களை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்துக்களை நான் கைப்பற்றவில்லை. முந்தைய ஆய்வாளர் தான் கைப்பற்றினார். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், எதிரி மீது தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.